## 1. அவை முன்னவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் 72-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துரைகள் வழங்குதல்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று நம்முடைய அவை முன்னவர் டாக்டர் நாவலர் அவர்களுக்குப் பிறந்த நாள். 71 ஆண்டுகள் நிறைவுற்று 72-வது ஆண்டிலே அவர் காலடி எடுத்து வைக்கிறார். 72 ஆண்டுகள் அவருக்கு ஆகிவிட்டது என்பதைச் செய்தி வாயிலாக, பத்திரிகை வாயிலாக நாம் பார்க்கிற காரணத்தாலே தான் நம்மாலே நம்ப முடிகிறதே தவிர, அவரைப் பார்த்தால் 71 ஆண்டுகள் நிறைவுற்று 72ஆம் ஆண்டிலே காலடி எடுத்து வைப்பவராகத் தெரியவில்லை. இன்னும் இளமையோடு இருக்கிறார். அந்த இளமையின் இரகசியத்தை நமக்கும் அவர் சொல்லிக் கொடுத்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

தமிழகத்திலே இருக்கின்ற மூத்த அரசியல் தலைவர்களிலே ஒருவராக இன்றையதினம் நாவலர் அவர்கள் விளங்குகிறார்கள். அண்ணா அவர்களாலே நடமாடும் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்பெற்றவர். அந்த அளவிற்கு அண்ணா, அவர்களிடத்திலே அன்பு கொண்டிருந்தார்கள். அவருக்குத் தெரியாத விஷயங்களே இல்லை. எதையும் ஆழ்ந்து, ஊன்றித் திளைத்துப் படித்து அதை வெளியிடுவதிலே மிகவும் சாமர்த்தியமானவர் என்று அண்ணா அவர்கள் கருதினார்கள். அதனாலேதான் அண்ணா அவர்கள் இருந்த நேரத்திலே இந்த அவையின் அவை முன்னவராக அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

நான் அறிந்த வரையில், தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் இவர்தான் மிக நீண்ட காலம் அவை முன்னவராகப் பணியாற்றியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். சரியாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் 1967 இலேயிருந்து 1969 வரை அவை முன்னவராக இருந்திருக்கிறார். பிறகு 1971 இலேயிருந்து தொடர்ந்து அவை முன்னவராகப் பணியாற்றியிருக்கிறார். 1980-இலேயிருந்து 1987 வரை அவை முன்னவராகப் பணியாற்றியிருக்கிறார். மீண்டும் இப்பொழுது அவை முன்னவராக இருக்கிறார் என்று சொன்னால் இவர்தான் மிக நீண்ட காலம் இந்த அவையிலே அவை முன்னவராகப் பணியாற்றியவராக இருக்க வேண்டும். அவருடைய பணி சிறக்க வேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன். அவருடைய அனுபவங்கள் முழுவதும் இந்த அவைக்குப் பயன்பட வேண்டுமென்று சபையினுடைய விருப்பத்தையும், எதிர்க்கட்சியினுடைய எண்ணத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவை முன்னவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் 72-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துரைகள் வழங்குதல்

1991 ஜூலை 11] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

அவர் பிறந்தது சோழ மண்டலத்தில். தஞ்சை மாவட்டத்திலே பிறந்தவர். பெயரோ பாண்டியனுடைய பெயரைத் தாங்கியிருக்கிறார், பாண்டியன் நெடுஞ்செழியனாக இருக்கிறார். ஆனால், சொந்தம் எங்களுக்குத்தான் கொஞ்சம் அதிகம் என்று நான் நினைக்கிறேன், கொங்கு மண்டலத்திற்குத்தான் அவர் அதிகம் சொந்தம். அவர் கோவையிலே ஜி.டி. நாயுடுவினுடைய ஹாஸ்டலிலேதான் வார்டனாக முதன் முதலிலே பணியாற்றியவர். அதுமட்டுமல்ல, அவர் பயிற்சி பெற்ற பள்ளிக்கூடம் கொங்குமண்டலத்திலே இருக்கிறது. ஈரோட்டிலே பெரியாரிடத்திலே அவர் பாடம் பயின்றவர்.

ஆகவே அத்தனை வகையிலேயும் எங்களுக்குக் கொஞ்சம் சொந்தம் அதிகம் என்பதை நான் சொல்லி, அவருடைய அனுபவம் முழுக்க முழுக்க இந்த அவைக்கும், தமிழகத்திற்கும் பயன்படவேண்டும். அவர் நீண்ட ஆயுளைப் பெற்று, எல்லாப் பேறுகளையும் பெற்று வாழ்வதற்கு ஆண்டவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமாரதாஸ்

டாக்டர் தே. குமாரதாஸ்: பேரவைத் தலைவரவர்களே, அவையின் முன்னவர் அவர்களுடைய 72-வது பிறந்த தினத்தை இன்றைய தினம் கொண்டாடிக் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில் அவர்களைப் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இன்றைய தினம் 72-வது ஆண்டு பிறந்த தினத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் நான் கூட நேற்றையதினம் பத்திரிகையிலே பார்த்தபோது இவர்களுக்கு 72 வயது ஆகி விட்டதா என்கிற ஒரு எண்ணம் உண்மையிலே எனக்குத் தோன்றியது. அவருடைய செயல்பாடுகளினால்—வயதுதான் அதிகமென்று, அதுவும் அவர்கள் சொல்லித்தான் வெளியே தெரிய வேண்டிய சூழ்நிலை இருந்தாலும் கூட—எண்ணத்தால், எங்களைவிட இளையவராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய அண்ணாவின் அன்புத் தம்பியாக, பெரியார் அவர்களின் உத்தம சீடனாக இருக்கிறார்கள். இந்த அவையிலே, அவர்கள் முன்னவராக அதிக காலம் இருந்த கால கட்டத்தில் நாட்டிற்குப் பயன் விளைவிக்கின்ற விதத்தில் நல்ல பல சட்டங்களை, இந்தச் சட்ட மன்றத்திலே இயற்றுவதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள், செயல்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அரசியல் வாழ்வு, இதைவிட சீரோடும், சிறப்போடும் விளங்க வேண்டுமென்று வாழ்த்துவதோடு, என் சார்பிலேயும், நான் சார்ந்துள்ள ஜனதா தளத்தின் சார்பிலேயும் அவர்களுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

# அவை முன்னவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் 72-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துரைகள் வழங்குதல்



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் 72-வது பிறந்ததின நிகழ்ச்சியை மிகச் சிறப்பான முறையிலே கொண்டாடுவதாகக்கூட பத்திரிகையிலே நான் பார்க்கவில்லை. பத்திரிகையிலே ஒரு சிறிய செய்தியாகத்தான் என்னால் பார்க்க முடிந்தது. எனக்கு முன்னதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, 72 வயது வரையிலே அரசியலிலே ஒரு மூத்த தலைவராக இருப்பதைவிட, அரசியல் நிதானத்தோடும், பக்குவத்தோடும் மற்றவர்கள் அவர்களுடைய பாங்குகளைப் பார்த்து பின்பற்றக்கூடிய விதத்தில், அவர்களுடைய . . . .

*திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ். திருநாவுக்கரசு அவை கண்ணியத்திற்கு முரணாக வந்திருக்கிறார். அவரை உடனே அப்புறப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். திரு. பழனிசாமி தொடர்ந்து பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : அவர்களுடைய அரசியல் வாழ்க்கை, நாட்டு மக்களுக்கு— அவர்களுடைய சேவை— மிகவும் தேவை. அவர்களைப் பார்த்து, வாழ்த்துவதற்கு எனக்கு வயது போதா விட்டாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அவர்களை வாழ்த்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழவும், நாட்டு மக்களுக்கு அவர்களுடைய அரசியல் வாழ்க்கை தேவை என்றும் கூறி வாய்ப்புக்கு நான் நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றத்தினுடைய அவை முன்னவரும், தமிழகத்தினுடைய நிதி அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற மரியாதைக்குரியவருமான நாவலர் அவர்களுக்கு 72 வயது பூர்த்தியானதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து அவர்கள் அரசியலிலே பணியாற்றி பல்வேறு அனுபவங்களைப் பெற்றவர்கள். அந்த அனுபவத்தின் அடிப்படையிலே, எதிர்காலத்திலே தமிழக மக்களுக்கு, தான் கொண்டிருக்கக்கூடிய நிதி அமைச்சர் பொறுப்பிலே, எந்தெந்த வகையாக மக்களுக்கு எப்படியெல்லாம் உதவி செய்ய வேண்டும்; எந்தெந்த வகையிலே எதிர்காலத்திலே, மக்களைப் பொருளாதார விடுதலைக்கு இட்டுச் செல்ல வேண்டுமோ அந்த வகையிலே அவர்களுடைய பணி இருக்குமென்று நம்புகிறேன். அந்த வகையிலே, எனது சார்பிலும், நான் சார்ந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் அவர்கள் நீடூழி வாழ்க என்று வாழ்த்தி, அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையினுடைய உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அவையின் கண்ணியத்திற்கு முரணான ஒரு செயலைச் செய்து கொண்டு இங்கே வந்து அமர்ந்திருக்கிறார். இது கண்ணியத்திற்குரிய செயல் அல்ல என்பதை அறிவுறுத்தி, அவர் உடனடியாக அவர் கட்டி வைத்திருக்கிற துணியை அவருடைய முகத்திலே இருந்து நீக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்ணியக் குறைவான எந்தக் காரியத்தையும், இந்த அவையில் என்னால் அனுமதிக்க முடியாது. எனவே, அவர் உடனடியாக இந்த அவையை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
திரு. திருநாவுக்கரசு அவர்கள் வெளியேற வேண்டும்
அவையினுடைய மார்ஷல், அவரை வெளியேற்றலாம்.

(பேரவைக் காவலர்களால் திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவையினின்றும் வெளியேற்றப்பட்டார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஆண்டித் தேவர்

9-40 மணி

**திரு. சி. ஆண்டித் தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .......

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்குக் கொடுத்திருந்த..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள். திரு. சி. ஆண்டித் தேவர் பேசட்டும்

**திரு. சி. ஆண்டித் தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னவர் நாவலர் அவர்கள் 71 வயதினை முடித்து 72ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறார்கள். அவர்களுடைய பிறந்த நாளை இன்று காலையில் மிக எளிமையாகக் கொண்டாடினார்கள். அவர்கள் மிகுந்த அனுபவம் மிக்க ஒரு அரசியல்வாதி. நீண்ட நெடுங்காலமாக பெரியார் பாசறையில் பயின்று பேரறிஞர் அண்ணா அவர்களால் நடமாடும் பல்கலைக் கழகம் என்று அழைக்கப்பட்டவர்களும், இந்த அவையில் நீண்ட அனுபவம் உள்ளவர்களுமான நாவலர் அவர்கள் இன்றைக்குப் பிறந்த நாளினைக் கொண்டாடினார்கள் என்று சொன்னால் அவர்களுடைய அனுபவமும், அவர்களுடைய அந்த நல்ல அரசியல் பணிகளும் இந்த மன்றத்திற்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டு மக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவர்களுடைய பணி இன்னும் தொடர்ந்து இந்த நாட்டுக்கும், அவர் சார்ந்திருக்கின்ற இயக்கத்திற்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற முறையில் அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில், அவர்கள் நீண்ட நாள் வாழ்க என்று வாழ்த்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தமிழரசன்

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் பல்கலைக் கழகம் என்றும், 'நாவலர்' என்றும் தமிழ் கூறும் நல்லுலகத்தால் பெருமைப் படுத்தப்பட்டு அழைக்கப்படுகிற டாக்டர் நாவலர் அவர்களுக்கு இன்றைக்கு 72-வது ஆண்டு பிறந்தநாள் என்கிற இந்தத் தித்திப்பான செய்தி நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. நாவலர் அவர்களுக்கு 72 வயது ஆகிவிட்டதா, அவர்கள் இவ்வளவு மூத்தவர்களா என்று இவரைப் பார்த்து மற்றவர்கள் எல்லாம் பொறாமைப்படுகிற வண்ணம் இன்றும் அவர் இளமை மிடுக்கோடு இருந்து பணி யாற்றிக்கொண்டிருப்பதை நாம் எல்லாம் மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

"தம்பி வா, தலைமை ஏற்க வா" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்ட டாக்டர் நாவலர் அவர்கள் இன்றைக்கு திராவிட இயக்கத்தினுடைய மிகப் பெரிய மூத்த தலைவராக விளங்கிக் கொண்டிருக்கிறார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்., இன்றைக்கு புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா ஆகிய நான்கு தலைவர்களுடனும் நெருங்கிப் பழகுகிற மிகப் பெரிய வாய்ப்புப் பெற்றவர் டாக்டர் நாவலர் அவர்கள். அவர் இந்த மாமன்றத்தில் மிக நீண்ட காலம் பணியாற்றி தமிழக மக்களுக்கு நல்ல பணிகளை ஆற்றி இருக்கிறார். அவர் மிகச் சிறந்த கடமை வீரர், கண்ணியம் மிகுந்தவர், எளிமையானவர். அவர் நீண்டகாலம் வாழ்ந்து இந்தத் தமிழ் மக்களுக்கும், சட்டமன்றத்திற்கும் நல்ல பணி ஆற்றிட வேண்டும் என்று இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் உங்களுடைய வாழ்த்துக்களோடு என்னுடைய வாழ்த்துக் களையும் இணைத்து அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர், நடமாடும் பல்கலைக் கழகம், டாக்டர் நாவலர் அவர்கள் தனது வயதின் 71ஆம் ஆண்டைத் தாண்டி 72ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளார் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சியும், பேருவகையும் கொள்கிறோம். தனது 72ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினை எளிமையாகக் கொண்டாடிவிட்டு தற்போது அவைக்கு வந்துள்ளார். தன் சிறு வயது முதல் திராவிட இயக்க வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக தமிழகப் பொது வாழ்வில் தனக்கென தனிச்சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றிருப்பவர் டாக்டர் நாவலர் எனச் சொன்னால் அது மிகையாகாது. தந்தை பெரியாரின் தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் தோழராய், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் நல்ல துணையாய் சீரோடும், சிறப்போடும் பணியாற்றி, பெருமை

தமிழக வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் அளவிட முடியாதவை யாகும். அத்துணைச் சிறப்புக்குரிய பணிகளையும் ஆரவாரம் ஏதுமின்றிச் செய்து வந்துள்ளார் என்பதுதான் அவரது தனிச் சிறப்பாகும். 72ஆம் வயதில் அடி எடுத்து வைத்துள்ள அவர் இன்னும் வாழ்ந்து தன் 100-வது வயதிலும் தமிழக மக்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார், தொண்டாற்றினார் என்னும் சிறப்பைப் பெறும் அளவுக்கு வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும் என்று என் இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

72ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாடும் அவருக்கு என் சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வ தோடு, இந்த அவையும் அவரைப் பாராட்டி வாழ்த்திடவேண்டு மென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

9-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல தமிழ் அறிஞரும் நற்றமிழ்க் காவலருமான நம்முடைய நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலருடைய 72-வது ஆண்டு பிறந்த நாளை யொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், ஏனைய கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்துள்ள வாழ்த்துக்களோடு என்னுடைய வாழ்த்துக்களையும் அவர்களுக்குத் தெரிவித்து, அவர் நீண்டு புகழ்பெற்று, பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும் என்று இந்த அவையின் சார்பிலேயும், தமிழகத்தின் சார்பிலேயும் தெரிவித்து அவருக்கு என்னுடைய வாழ்த்துக் களைக் கூறி அமர்கிறேன். இப்போது மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 71 ஆண்டுகள் நிறைவு பெற்று 72-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த இளைஞனை இந்த அவையினர் பாராட்டிப் போற்றி வாழ்த்தியதற்காக என்னுடைய உளங்கனிந்த நன்றியறிதலை உவகைப் பெருக் கோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்தரை கோடி மக்களின் சார் பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றவர்கள், இந்த அவையிலே கூடி இருக்கின்ற பிரதிநிதிகள் சார்பாக இந்த அவை என்னை வாழ்த்துகிறது என்று சொன்னால், தமிழகத்திலே இருக்கின்ற ஐந்தரை கோடி மக்களும் வாழ்த்துகிறார்கள் என்கின்ற ஒரு பேற்றை நான் இன்று பெற்று இருப்பதற்காகவும் இந்தப் பேற்றினை ஏற்பாடு செய்து தந்த மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கும், மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கும் மற்ற வர்களுக்கும் என்னுடைய உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் உள்ளபடியே பூரிப்பும் பெருமையும் கொள்கிறேன். பெற்றவர்தான் நமது நாவலர் அவர்கள். அவர் தமிழுக்கும்,

# அவை முன்னவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் 72-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துரைகள் வழங்குதல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 ஜூலை 11

அது மட்டுமல்லாமல், எனக்காக இந்த அவையினுடைய நேரத்தில் இவ்வளவு நேரம் செலவழித்திருக்கின்றீர்கள் என்பதை எண்ணுகிறபோது என்னிடத்திலே எவ்வளவு அன்பும் அரவணைப்பும் பந்தமும் பாசமும் கொண்டிருக்கிறது இந்த அவை என்பதைப்பற்றி எண்ணுகிறபோது உள்ளபடியே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

என்னைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் நான் இளமையாக இருக்கிறேன், இளமையாக இருக்கிறேன் என்று சொல்லி 'கண்ணேறு பட்டுவிட்டதோ' என்று எண்ணுகின்ற அளவுக்கு, வடமொழியிலே 'திருஷ்டி' என்பார்கள், அதுபோல் இப்போது கண்ணேறு படுகின்ற அளவுக்கு ஆகியிருக்கிறது. அதிலே எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் எதிர்காலத்தில் என்னுடைய இளமையும் உடலும் பாதிக்கப்படுமோ என்று எண்ணுகின்ற அளவுக்கு இங்கே பலரும் பாராட்டியிருக்கிறார்கள். ஆக சென்ற 60 ஆண்டுக்காலமாக கிட்டத்தட்ட அரசியல் உணர்வுக்கு உயர்ந்து, 47 ஆண்டுக்காலமாக அரசியலிலே நேரடிப் பங்கு கொண்டு இந்த நாட்டிற்காகவும், மொழிக்காகவும், மக்களுக்காகவும் பல்வேறு மேம்பாடுகள் கருதி உழைத்த என்னை இந்த அவை பாராட்டுகிறது என்று எண்ணுகின்றபோது உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன். என்னை மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இங்கே எதிர் வரிசையிலே உட்கார்ந்து இருக்கின்ற நல்ல எண்ணம் படைத்த எதிர்க்கட்சித் தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களும் பலபடப் பாராட்டியிருக்கின்றார்கள். அவர்கள் பாராட்டி எடுத்துச்சொல்லிய அத்தனை உரைக்கும் நான் பொருத்தம் உடையவன் என்றும் சொல்ல மாட்டேன், பொருத்தம் உடையவன் அல்லன் என்றும் சொல்ல மாட்டேன். ஏனென்றால் நான் இங்கே, என்னைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிற வார்த்தைகளை நானே நீதிபதியாக இருந்து தீர்ப்பு அளிப்பது இயலாத ஒன்றாக இருப்பதன் காரணமாக, இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொல்லிய கருத்துக்களுக்கு எந்த வகையில் நான் பொருத்தம் உடையவனாக இருக்கிறேனோ அந்த அளவுக்கு எல்லோருடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் பெற்று, எந்த அளவுக்கு நான் இன்று பொருத்தமுடையவன் அல்லனாக இருக்கிறேனோ, அந்த அளவுக்கு என்னை எதிர்காலத்தில் பொருத்தமுடையவனாக ஆக்கிக்கொள்வதற்கு இவர்கள் தந்த ஊக்க மொழிகள் எனக்குப் பயன்படும் என்ற முறையில் இவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இளமை பற்றிச் சொன்னார்கள். உள்ளபடியே ஆண்களைப் பொறுத்தவரையில் ஒரு பழமொழி உண்டு. ஆண்கள் எல்லாம் என்ன எண்ணுகிறார்களோ, அதுதான் அவர்களுக்கு வயது.

அவை முன்னவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
அவர்களின் 72-வது பிறந்த நாளையொட்டி
(வாழ்த்துரைகள் வழங்குதல்)

*1991 ஜூலை 11]* *[டாக்டர் இரா, நெடுஞ்செழியன்]*

9-50 மணி

அது 90 ஆக இருந்தாலும் 30 வயது என்று எண்ணினால் 30 வயதுதான். ஆக, 75 வயது ஆக இருக்கும்போது 20 வயது என்று எண்ணினால் 20 வயதுதான். அதேநேரத்தில் 16 வயது உடைய மாணவர்கள் 70 வயது என்று எண்ணினால் அவன் வயது 70 தான். ஆக அவன் உள்ளத்தைப் பொறுத்துத் தான் அவன் வயது வரும். பெண்களைப் பொறுத்தவரை பார்வைக்கு எவ்வளவு வயது என்று தோன்றுகிறார்களோ அதுதான் அவர்களுக்கு வயது என்றும், ஆண்களைப் பொறுத்து அவர்கள் என்ன எண்ணுகிறார்களோ அதுதான் அவர்களுடைய வயது என்றும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆக, அந்தவகையிலே அவரவர்களுடைய உள்ளப்பாங்கைப் பொறுத்துதான், மனப்பாங்கைப் பொறுத்துத்தான் அவர்களுடைய செயல்களும் இருக்கும், மன வலிமையும் இருக்கும், மனத் தன்மையும் இருக்கும். ஆக, எல்லோருடைய பாராட்டுக்களையும் கண்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அவைக்கும், இந்த நாட்டுக்கும் பாடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதற்காக உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன். அப்பர் எடுத்துச் சொன்னதுபோல், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கடன்பணி செய்து கிடப்பதாக இருந்தாலும், என்னைத் தாங்க வேண்டியதும், ஆதரிக்க வேண்டியதும், உங்களுடைய கடன் என்கின்ற அளவுக்கு இந்த அவையைச் சார்ந்தவர்கள் தருகின்ற ஆதரவின் அடிப்படையில்தான் இந்த அவையை நான் நடத்திச் செல்ல வேண்டும். எந்த ஒரு பணியையும் செய்ய முற்பட்டுவிட்டால் அந்தப் பணியைத் தானாகவே எய்திவிடும் அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். அந்த வகையில் இந்தப் பணியை ஏற்று நடத்துவதற்கான அந்த வாய்ப்பு ஏற்பட்டிருப்பதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஆகவே, இந்த அவையினுடைய பெருமை வளரவும். இந்த அவையினுடைய பாங்கு வளரவும், இந்த அவை சீராகவும், செம்மையாகவும் சீர்படச் செயல்படவும், அதன்மூலம் இந்த நாட்டுக்கான நல்ல பணிகளை ஆற்றவும் இந்த அவையினருடைய முழு ஒத்துழைப்பும் இருந்தால் எனக்குப் பெரு மகிழ்ச்சி இருக்கும். 'வாய் இருந்தும் பேசாத ஊமைகளாய், காது இருந்தும் கேட்காத செவிடர்களாய், கண் இருந்தும் பார்க்காத குருடர்களாய்' நிறையப் பேர் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் இந்த நாட்டிலே. இருக்கிற வாயைக் கூட மூடிக்கொண்டு சில பேர் நடமாடுகிறார்கள் (சிரிப்பு) என்று நினைக்கிறபோது உள்ளபடியே வாய் இருப்பதும், கண் இருப்பதும் காது இருப்பதும் நல்ல பணிகளைச் செய்வதற்குத்தான் என்கிற அடிப்படையில், அந்தப் பணிகளைச் செவ்வனே நல்ல பண்பின் அடிப்படையில் நிறைவேற்றினால்தான் உள்ளபடியே நல்லதொரு சூழ்நிலை ஏற்பட முடியும். அந்தவகையிலே நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி தீர்வு காண அமைந்ததுதான் நம்முடைய சட்டமன்றமும், பாராளுமன்றமும் ஆகும். நாட்டிலே உள்ள

நல்லவைகளை எடுத்துக்காட்டி, ஆட்சியினிடத்தில் இருக்கிறகுறைகளையும் சுட்டிக்காட்டி, குறைகளைப் போக்கவும், குற்றங்களை அகற்றவும் ஆன நல்ல பல நிலைமைகளை உருவாக்க எல்லோரும் பணியாற்றி கருத்துக்களை எடுத்து வழங்கும் ஓர் இடமாகச் சட்டமன்றம் அமைந்திருக்கிறது. ஆகவேதான் இந்த இடம் மிகச் சிறப்பான முறையில் பயன்பட வேண்டுமானால் நாம் எண்ணுகின்ற எண்ணங்கள் எல்லாம் மிக நல்ல முறையில் ஈடேறவும் இந்த அவை பெரும் பெயரும், புகழும் பெறவும் நல்லதொரு வாய்ப்பும் வசதியும் உடைய இடம் ஆகும்.

அதற்கு இந்த அவை முழு ஒத்துழைப்பு தரும் என்ற வகையில், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களோடும், பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களோடும் இணைந்து பணியாற்றி, பிறகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களோடும் இணைந்து பணியாற்றி, இப்போது புரட்சித் தலைவி அவர்களோடும் இணைந்து பணியாற்றுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிமிக்க ஒன்றாகும். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட அரும்பெரும் பணிகள் சிறந்து நீடித்து நடைபெறுவதற்கு உதவியாக நீங்கள் தந்திருக்கின்ற ஆதரவும், பாராட்டுரைகளும், போற்றுரைகளும் எனக்கு மேலும் மேலும் வலுவூட்டும். தளர்வு ஏற்படுகின்றபோதெல்லாம் இத்தகைய சிறந்த சொற்கள், ஆதரவான, அரவணைப்பான சொற்கள் எனக்குப் பயன்படும் என்று சொல்லி, எனக்குப் பாராட்டுரைகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்த மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மற்ற அனைத்து மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உள்ளபடியே தமிழ் வளரவும், தமிழர்கள் மேம்பட்டு ஓங்கவும் தமிழ்நாடு வளம்பெற்று நலம்பெற்றுத்திகழவும், இந்தியா எல்லா வகையிலும் சிறப்புற்று ஓங்கி, உலகத்தில் நல்லதொரு இடத்தைப் பெற்றுத்திகழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படவும் அப்படிப்பட்ட நல்லதொரு சூழ்நிலை ஏற்படுமானால் அவை நமக்குப் பெரு மகிழ்ச்சி தருவதாக அமையும் என்ற சொற்களைக் கூறி, மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து இத்துடன் முடிக்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி),

## 3. தகவல் கோரல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் தொடர்ந்து பெருமழை பெய்ததால் ஏற்பட்டுள்ளச் சேதங்களைப் பார்வையிட குழு அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1 1/2 மாத காலமாக கன்னியாகுமரி